DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO. 40 /2012

DEPOSITION OF WITNESS 16 FOR PROSECUTION.

| | |
|---|---|
| Name | : செல்வகுமாரி |
| Father's/Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 31.08.2021.

முதல் விசாரணை

நான் தற்போது உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்தில் பெண் காவலராக (எண்.837) பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2011 ம் வருடம் உசிலம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணி செய்தேன். உசிலம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண் 2/2009 சி.சி.எண். 258/2009 என்ற வழக்கில் செல்வி என்பவர் புகார்தாரர். இந்த வழக்கு சம்பந்தமாக 16.6.2009 ல் நான் நீதிமன்ற அலுவலில் உசிலம்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் பணியில் இருந்தேன். இந்த வழக்கில் 30.6.2009 ல் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளுக்கு அழைப்பாணை போடப்பட்டிருந்தது. இந்த சாட்சி அழைப்பாணையை சார்பு செய்ய நாட்டாமங்கலம் போனபோது வீடு தெரியவில்லை. போன் நம்பரில் தொடர்பு கொண்ட போது மேற்படி சாட்சி செல்வி தான் வீட்டில் இல்லை என்றும் காவல் நிலையத்திற்கு வந்து அழைப்பாணையை வாங்கிக்கொள்தாகவும் கூறினார். நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். ( வழக்கு வருடம் தான் 2009 என்றும் சாட்சி விசாரணைக்கு வந்த வருடம் 2011 என்றும் 16.6.2011 மற்றும் 30.6.2011 மேற்படி வழக்கு வாய்தா வந்தது என்றும் தன்னிச்சையாக கூறினார்) அதன்பிறகு 30.6.2011 அன்று சாட்சி 1 செல்வி உசிலம்பட்டி நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்திற்கு காலை 9.30 மணிக்கு வந்தார். அங்கு வைத்து சாட்சி அழைப்பாணையில் மேற்படி சாட்சி செல்வியிடம் நான் கையெழுத்து வாங்கினேன். இது தான் அந்த அழைப்பாணை. மேற்படி சாட்சி அழைப்பாணை அ.த.சா.**ஆ.23** ஆகும். அன்று காலை 10.30 மணிக்கு கோர்ட்டுக்கு

வரவேண்டும் என்றும் அது வரை காத்திருக்குமாறும் சாட்சி செல்வியிடம் கூறினேன். அதற்கு மேற்படி சாட்சி செல்வி தன் கணவர் தன்னை கூப்பிடுகிறார் என்றும் எனவே ராசியாக பேச போகிறோம் என்றும் அடுத்த வாய்தாவில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னார். (இந்த கேள்விக்கு எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது) அதனால் மேற்படி சாட்சி செல்வி நீதிமன்றத்தில் சாட்சி சொல்லாமல் வெளியே போய்விட்டார். நான் மேற்படி நீதிமன்றத்திற்குள் இருந்தேன். சாட்சி செல்வியின் கணவர் யோகராஜ் அன்று மேற்படி நீதிமன்றத்தில் வாய்தாவுக்கு ஆஜரானார். மேற்படி யோகராஜ் மேற்படி வழக்கில் ஆஜராகிவிட்டு வெளியே போய்விட்டார். மேற்படி சாட்சி செல்வி மேற்படி யோகராஜ் உடன் போனதாக கேள்விட்டேன். இவ்வளவு தான் எனக்குத் தெரியும்

<u>குறுக்குவிசாரணை எதிரி தரப்பில்</u>

எனக்கு சம்மன் எப்படி வாங்குவது என்றும் எப்படி சார்பு செய்வது என்றும் தெரியும். எங்கள் காவல் நிலையத்தில் கோர்ட்டுக்கு என்று தனியாக ஒரு தலைமைகாவலர் உண்டா என்றால் முதல் நிலை காவலர் தான் உண்டு. அந்த முதல்நிலை காவலர் நான் தான். நிறைய போலீசார் இருந்தால் சம்மன் சார்பு செய்ய பாஸ்போர்ட் போட்டு பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து அனுப்புவார்கள். ஆனால் எங்கள் காவல் நிலையத்தில் ஆள் இல்லாததால் கோர்ட் வேலை மற்றும் சம்மன் சார்பு செய்யும் வேலையை நான் தான் பார்த்து வந்தேன். கோர்ட்டுக்கு சென்றால் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து விட்டு போக வேண்டும் என்றால் சரிதான். நான் தான் வழக்கமாக கோர்ட்டுக்கு போவேன். சம்மன் சார்பு செய்ய நீதிமன்றத்தில் இருந்து கொடுக்கப்பட்டால் அப்படியே வாங்கிக்கொண்டு சம்மன் சார்பு செய்ய சென்று விடுவேன். இல்லை என்றால் சனி, ஞாயிறு போன்ற நாட்களில் பாஸ்போர்ட் பெற்று பொது நாட்குறிப்பில் பதிவு செய்து போகவேண்டும். நீதிமன்றத்தில் சம்மன் வழங்க ஒரு பதிவேடு உண்டு. அந்த பதிவேட்டில் கையெழுத்து செய்து சம்மனை பெற்று செல்வோம். எந்த தேதியில் சம்மன் பெறப்பட்டது என்று அந்த பதிவேட்டில் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். ஆள் வந்தாலும் வரவில்லை என்றாலும் சார்பு செய்த சம்மனை அந்த வாய்தா தேதியில் நீதிமன்றத்தில் கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். நாங்கள் கொடுக்கவில்லை என்றாலும் நீதித்துறை நடுவர் அந்த சம்மனை கேட்பார் என்றால் சம்மனை கேட்கமாட்டார். சாட்சி வந்துள்ளதா என்று கேட்பார். சாட்சி வந்திருப்பதாக சொன்னால் அது வழக்கு நாட்குறிப்பில் எழுதப்படும். அ.த.சா.ஆ.23 சம்மன் கொடுத்தது பற்றி புலன்விசாரணை அதிகாரி என்னிடம் எப்போதாவது விசாரித்தாரா என்றால் இல்லை. அ.த.சா.ஆ.23 தற்போது நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நீதித்துறை நடுவர் கேட்காததால் அந்த அழைப்பாணையை

நான் வழக்கு நாட்குறிப்பில் வைத்திருந்தேன். அந்த CD பைலில் இருந்து அ.த.சா.ஆ.23 சம்மனை இன்று அரசு வழக்குரைஞர் அலுவலகத்தில் இருந்து பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். இந்த வழக்கு நாட்குறிப்பை அரசு வழக்குரைஞர் அலுவலகத்தில் பார்த்தேன். அன்று நான் நீதிமன்றத்திற்கு சென்றதற்கோ, சம்மன் சார்பு செய்ததற்கோ அ.த.சா.ஆ.23 ஆவணத்தை தவிர வேறு ஆவணம் எதுவும் இல்லை. அ.த.சா.ஆ.23 ல் வலது மேற்பகுதியில் வாய்தா தேதி எழுதப்படும். இடது பக்கத்தில் சிசி எண், குற்ற எண் ஆகியவை எழுதப்படும். நடுப்பகுதி காலத்தில் வாய்தா தேதி, மாதம், வருடம் ஆகியவை குறிக்கப்படும். அ.த.சா.ஆ.23 ல் வலது மேற்பகுதியில் தேதி திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் ஓவர்ரைட்டிங் உள்ளது. அந்த 30 என்ற எழுத்துக்குள் வேறு தேதி இருக்கிறதா என்றால் 16 என்று போட்டு பிறகு 30 என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் அது நீதிமன்றத்தில் ஏற்பட்ட தவறு. அந்த திருத்தத்தை நான் செய்யவில்லை. மேற்படி சம்மனில் மாதம் திருத்தப்பட்டுள்ளது என்றால் திருத்தியிருக்கிறது. ஆனால் அதை நான் திருத்தவில்லை. அதேபோல் சிசி எண்ணிலும் குற்ற எண் உள்ள வருடத்தில் திருத்தம் உள்ளது. சாதாரணமாக நீதிமன்றத்தில் சம்மன் வழங்கினால் நீதிமன்ற சம்மன் பதிவேட்டில் உள்ள எண்ணை சம்மனில் குறிப்பார்கள் என்றால் குறிப்பார்களா இல்லையா என்று எனக்கு தெரியாது. சம்மன் எப்படி எழுதுவார்கள் என்று எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் Despetch ரிஜிஸ்டரில் நம்பர் போட்டு கையெழுத்து வாங்குவார்கள். அந்த நம்பரை அவர்கள் சம்மனை கொடுத்திருந்தால் குறிப்பார்கள் என்றும் நான் வேண்டும் என்றே மறைக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. சம்மன் படிவம் நீதிமன்றத்தில் தான் இருக்கும். காவல் நிலையத்தில் இருக்காது. இதுபோன்ற சம்மன் காவல் நிலையத்தில் இருக்கும் என்றால் சரியல்ல. PSO –ல் சம்மன் படிவம் இருக்கிறதா என்றால் எனக்கு தெரியாது. காவல் விசாரணைக்கு வருவதற்கு கம்பியூட்டர் மூலம் அழைப்பாணை தயார் செய்து கொடுப்பார்கள். 2011 ல் எங்கள் காவல்நிலையத்தில் கம்பியூட்டர் இருக்கிறதா என்றால் இருந்தது. அ.த.சா.ஆ.23 ல் சம்மன் ரிஜிஸ்டர் நம்பர் குறிக்கப்படவில்லை. மேற்படி சாட்சி செல்விக்கு வேறு வழக்கு இருந்ததா என்று எனக்கு தெரியாது. இந்த சம்மன் படிவம் எங்கள் காவல் நிலையத்தில் இருக்கும் என்றும் சார்பு ஆகாத படிவமும் இருக்கும் என்றும் அதை வழக்கிற்காக நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. நாட்டாமங்கலம் செல்லம்பட்டி போகும் வழியில் உசிலம்பட்டியில் இருந்து மதுரை ரோட்டில் இருக்கிறது. அங்கு ஆர்ச் ஒன்று உள்ளது. அதிலிருந்து வலது பக்கம் போகவேண்டும். உத்தப்பநாயக்கனூர் காவல் நிலைய எல்லைக்குள் சுளிஒச்சான்பட்டி இருக்கிறது. மேற்படி உத்தப்பநாயக்கனூர் வத்தலகுண்டு ரோட்டில் இருக்கிறது. அ.த.சா.ஆ.23 ல் செல்வியின் விலாசம் நாட்டாமங்கலம் என்று தான் உள்ளது. நாட்டாமங்கலத்தில் அவர்

தாயார் வீட்டில் இருப்பதாக எங்கள் வழக்கில் விலாசம் கொடுத்துள்ளார். சம்மன் சார்பு செய்யும் போது அன்று காலை 9.30 மணியில் இருந்து 10.00 மணிக்குள் இருக்கும். காலை 10.30 மணிக்கு நீதிமன்றம் துவங்கும். மேற்படி வழக்கை நீதிமன்றத்தில் அழைக்கும் போது காலை 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள் இருக்கும். மேற்படி வழக்கை மேற்படி நீதிமன்றத்தில் எடுத்த போது மேற்படி செல்வி நீதிமன்றத்திற்குள் ஆஜராகவில்லை. அந்த சம்மனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேனா என்றால் ஆஜர்படுத்தவில்லை. நீதிமன்றத்தில் கேட்கவில்லை என்பதால் ஆஜர்படுத்தவில்லை. கோர்ட்டில் செல்வி ஆஜராகவில்லை என்றும் அடுத்த வாய்தாவிற்கு வருவார் என்றும் சொன்னேன். நீதிபதி அந்த வழக்கை வாய்தா போட்டுவிட்டார். வாய்தா போட்டபிறகு சாட்சி சம்மனை நான் வாங்கவில்லை. அ.த.சா.ஆ.23 ல் செல்வியிடம் கையெழுத்து வாங்குவதற்கு முன்பு மேற்படி செல்வியிடம் வேறு எதிலும் கையெழுத்து வாங்கவில்லை. இந்த கையெழுத்து வாங்கிய பிறகு இந்த கையெழுத்தை இங்கு தான் பார்க்கிறேன் என்றால் சரிதான். நான் சொன்னப்படி சம்மன் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றும் மேற்படி செல்வி நீதிமன்றத்திற்கு வந்து கையெழுத்து செய்யவில்லை என்றும் இதில் எழுதியிருப்பது போல் செல்வி கையெழுத்து செய்வது இல்லை என்றும் அவர் தமிழில் கையெழுத்து செய்வது இல்லை என்றும் Y என்ற இன்சீயல் அவர் போடுவது இல்லை என்றும் சொன்னால் அவைகள் சரியல்ல. 30.6.2011 ம் தேதி வழக்கு நாட்குறிப்பை நான் எழுதி ஆய்வாளரிடம் கையெழுத்து வாங்கினேன். அதை ஆய்வாளர் பார்த்தார். நான் சொன்னப்படி எதுவும் நடக்கவில்லை என்றும் செல்வியை 30.6.2011 அன்று பார்த்ததாகவும் சம்மன் சார்பு செய்ததாகவும் மற்ற சங்கதிகளும் பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு சாட்சியம் வேண்டும் என்று சொல்லிக்கொடுத்து அதன்படி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. செல்வி அந்த வழக்கு வாய்தா முடியும் வரை இருந்தார். செல்வி அவர் கணவருடன் சென்றதாக நான் கேள்வி பட்டது யார் மூலம் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

மறுவிசாரணை-இல்லை.